**Tamil Heritage Foundation**

தமிழ் மரபு அறக்கட்டளை

Electronic preservation of Tamil heritage materials

e-Book series

an international NGO initiative to digitize old Tamil books and palm leaf manuscripts

visit http://www.tamilheritage.org

தமிழ் ஓலைச்சுவடிகள், நூல் பாதுகாப்பு.

பாதுகாப்பற்ற நிலையில், மறுபதிப்பு காணாத பழைய நூல்கள், ஓலைச்சுவடிகள் போன்ற தமிழ் முதுசொம்களை மின்பதிப்பாக்கி தமிழ் வளத்தை நிரந்தரமாக்கும் ஒரு சர்வதேச தன்னார்வ முயற்சி.

மேலும் அறிய: http://www.tamilheritage.org

முதுசொம் முத்திரை

தமிழ்ப்பாதுகாப்பின் அக்கறை

பாஞ்சாலவீரன்

# பாதர்வெள்ளை சண்டை



டி. ஆர். பாலகிருஷ்ண முதலியார்

விலை] 1956 [அணா 1

உ

சக்கதேவி துணை.

பாஞ்சாலங் குறிச்சி

# கட்டபொம்மு கதை

# பாதர் வெள்ளை சண்டை

தன்னன ஹதன தன்னஹனே
தன்னன ஹதன தன்னஹனே

## காப்பு

முந்தி முந்தி விநாயகரே
முருகா சரஸ்வதி என்குருவே

நாவில் சரஸ்வதி வந்திரம்மா நன்றாய்க் குடியிருக்க வேணுமம்மா
ஆலிலைமேற் பள்ளிகொண்டவரே ஆதி நாராயணா வந்துதவு
தென்பரங் குன்றினில் வாழ்முருகா தேனபிஷேகனே வந்துதவு
தல்லாகுளத்தினில் வாழுமெங்கள் சாமி கருப்பையா வந்துதவு
மொட்டைக் கோபுரத்தை யாளுகின்ற முனியாண்டியப்பனே வந்துதவு
படர்ந்தமரத்தடி காத்திருக்கும் பாண்டி முனியாண்டி வந்துதவு
மதுரைக்கோபுரம் காத்திருக்கும் மதுரை வீரா நீ வந்துதவு
ஆதிமஹேன்மணி யானவளே ஆயிரம் கண்ணுள்ள மாரியம்மாள்
வண்டியூர் தெப்பக்குளம் காத்தவளே வகையுள்ள முத்துமாரியம்மாள்
ஆண்டவளே குலதேவதையே அடியேனைக் கண்பார்க்க வேணுமம்மா
கண்கண்ட தேவதையே சக்கம்மாளே கம்பளத்தார்குலம் காத்தவளே
வடக்கே நல்ல பிறந்தவளே வலசக்கடையில் வந்தவளே
முன்னின்ற தேவதையே சக்கம்மாளே மூங்கில் கூடையில் வந்தவளே
குடிகொண்ட தேவதை சக்கம்மாளே கூடைப் பெட்டியில் வந்தவளே
மலைமேலே மாடுமேய்க்கப் போனவளே மதயானைக்குட்டியே ஓடிவாமா
வங்குலையாய் நல்ல மாண்டவளே வந்து உதவம்மா சக்கம்மாளே
சக்கம்மாள்வாக்குபலிக்கவேணும் சண்டையில்வெற்றியடையவேணும்
உத்தமிவாக்கு பலிக்கவேணும் ஊக்கத்துடன் சண்டை செய்யவேணும்
பத்தினிவாக்கு பலிக்கவேணும் பாரினில் சண்டைகள் செய்வதற்கு

# கதைவிபரம்

## வெள்ளையம்மாள் கனவு

பாதர்வெள்ளை சண்டை நான் படிக்க பாதுகாக்கவேணும் சக்கம்மானே,

வெ:- சொல்லாதீர் செல்லாதீர் என் கனவா
சீரில்லாச் சொர்பனங் கண்டிருக்கேன்

பா:- கண்ட சொர்பனத்தைச் சொல்லாவிட்டால்
கத்தியால் வெட்டுவேன் பாதர்வெள்ளை

வெ:- நெஞ்சம் பதறுதே என் கனவா நினைத்தகாரியம் சொல்லவென்றால்

பா:- பதறாமல்சொல்லடி வெள்ளையம்மா பார்த்தகாரியமின்னதென்று

வெ:- இஞ்சிகிணறுமிடியக்கண்டேன் எலுமிச்சந்தோட்டமழியக்கண்டேன்

பா:- இஞ்சிக்கிணறுமிடிந்தாலுமே இங்லிஷார்சண்டைக்குபோய்வருவேன்

வெ:- மந்தைக்கிணறுமிடியக்கண்டேன் மாமரச்சோலையழியக்கண்டேன்

பா:- மந்தைக்கிணறுமிடிந்தாலுமேமன்னவன்சண்டைக்குபோய்வருவேன்

வெ:- வாசலில் நின்ற முருங்கமரம் வம்பாய் விழ்க கனவு கண்டேன்

பா:- வம்பாய் விழ்க கனவு கண்டால் வல்லவன் சண்டை ஜெயிப்பேனடி

வெ:- மேகமில்லாவிடிக்கக்கண்டேன் வீரரே உம் தலை போகக்கண்டேன்

பா:- மேகமில்லாவிடிக்கக்கண்டால் மேலானயுத்தங்கள் செய்திடுவேன்

வெ:- கோட்டையில் பீரங்கி பாயக்கண்டேன்
கூட்டோடே கயிலாசம் சேரக்கண்டேன்

பா:- கூட்டோடே கயிலாசம் சேரக்கண்டால்
கும்பினியில் யாவரும் சாகமாட்டோம்

வெ:- கூகைநின்று குலரக்கண்டேன் கோபத்திலாந்தையலரக்கண்டேன்

பா:- கோபத்திலாந்தையலரக்கண்டால் கும்பினிபட்டாளம்வெட்டிடுவேன்

வெ:- காகம் பறக்காத பாஞ்சாலில் கருப்புச்சட்டை யுலாவக்கண்டேன்

பா:- கருப்புச்சட்டையுலாவக்கண்டால்
கத்தியால் வெட்டுவேன் பட்டாளத்தை

வெ:- கயத்தாற்றிலே கட்டப்புளியிலே
கட்டபொம்மு தலை தொங்கக்கண்டேன்

பா:- கட்டபொம்மு தலை தொங்கக்கண்டால்
காலன்துரையுடன் சண்டை செய்வேனடி

வெ:- தாலிகழன்றுவிழுகக்கண்டேன் தாஷ்டீகரேநீங்கள்போகவேண்டாம்

பா:- தாலிகழன்று விழுந்தாலுமே தாட்டியன் பட்டாளம் வெட்டுவேண்டி

வெ:- பட்டத்துயானைகள் விரிடவே பந்தயக்குதிரை சாகக்கண்டேன்
ஷை சிட்டுப்பறக்காத பாஞ்சையிலே சிவப்புச்சட்டை புலாவக்கண்டேன்
பா:- சிவப்புச்சட்டை புலாவக்கண்டால்
ஜெயிப்பேன் பட்டாளம் பாதர்வெள்ளை
வெ:- பொல்லாத சொப்பனங் கண்டதினால்
செல்லாதீர் சண்டையில் மாண்டிடுவீர்
பா:- என்புத்தி கேட்டவர் கோடானகோடி
பெண்புத்தி கேட்பேனோ பாதர்வெள்ளை
ஷை போகவிடை தரவேணுமடி போருக்குபோரேன் நான்பாதர்வெள்ளை
வெ:- சென்று வருவீர் என் கணவா தீராதி தீரரே என்றுரையே
பா:- உருண்டைச்சோறு கொடுத்து வளர்த்திட்ட
உத்தமனார் கட்டபொம்முதுரை

## பாதர்வெள்ளை சண்டைக்கு புறப்படுதல்

திரளைசோறு கொடுத்து வளர்த்திட்ட ஜெகவீரப்பாண்டிய னுமத்துரை
அப்பனைமைக்கிருரேன்றுசொல்லி ஆங்காரக் கோபமாய் என்னசெய்தார்
பின்னைபோல் வந்தவன் சுந்தரலிங்கம் பேய்க்குதிரைக்கு சேணிவைபடா
எவ்வித துன்பங்கள் வந்திடுமோ என்மனம் கொளுதே சுந்தரலிங்கம்
சண்டைக்கு வந்தவன் காலன்துரை சாகத்துணிந்தவன் பாதர்வெள்ளை
சிவி நல்ல மயிர்முடித்தார் சிங்காரக் கொண்டையுந் தானுமிட்டார்
கோணத்தலைப்பாவுந் தானுங்கட்டி குச்சு உருமாலுந் சுங்குவிட்டார்
கச்சை நல்ல வரிந்துகட்டி கருங்கச்சையுந் சுங்குவிட்டார்
கத்திநல்ல இடையிலிட்டார் கண்டாரக்கோடாலி தோளிலிட்டார்
சட்டிநல்ல சமுதாடு இடதுகையினில் வங்குசரும்
பட்டாக்கத்தியைத்தானெடுத்து பாங்குடன் வாராரும் பாதர்வெள்ளை
கட்டுமெட்டாக பொட்டுமிட்டு கண்ணாடிபார்த்து உருமால்கட்டி
கட்டக்கருப்பணன் சுந்தரலிங்கம் காரணமாகவே ரெண்டுபேரும்
பேய்க்குதிரையின்மேலேறி பேராம்பட்டியாம் பாதைவழி
வையாளி போடுதாம் முத்துவர்ணம் வாதி எதிபுதாம் பேய்க்குதிரை
ஒட்டாரங்காடு வுடங்காடு ஓடிவருகுதாம் பேய்க்குதிரை
சில்லரைக்காடு செடிங்காடு சிட்டாய்ப்பறக்குதாம் பேய்க்குதிரை

சின்னஞ்சிறு கற்களெல்லாம் சேர்ந்தான் பறக்குதாம் முன்னாலே
முன்னாலே ரெண்டடி பாயுதுபார் பின்னாலே ரெண்டடி தாவுதுபார்
காடுசெடிமலை தான் கடந்து கடுகிப்போறானாம் பாதர்வெள்ளை
காட்டுக் கடங்காத பாதர்வெள்ளை காவலன் குதிரை போகுதுபார்
பறக்கின்றதோர் பக்ஷிபோலே பறந்து போகுதாம் பேய்க்குதிரை
மூடின கண்ணு முழிக்குமுன்னே மூன்றுமைல்தூரம் போகுதுபார்
ஓட்டப்பிடாரத்தை நேர்பிடித்து ஓடிவருகுதாம் பேய்க்குதிரை
பாமலைபோலே ரெண்டுபேரும் பாஞ்சாலி நாட்டையுங் கண்டுவிட்டார்
குதிரையைவிட்டுமே தானிறங்கி கொடுமுடியானவன் பாதர்வெள்ளை
பட்டாக்கத்திக்கி யஞ்சாத படுபாவியானவன் பாதர்வெள்ளை
மறவர்குலத்துதித்தவனும் மன்னவன் வெள்ளையன் என்ன செய்தார்
கட்டபொம்முதுரை பேருசொன்னால் காகம்பறக்காதாம் பாஞ்சையிலே
ஊமைத்துரையென்று பேருசொன்னால் ஊக்கம் பிறக்குமாம் பூமியிலே
கீர்த்திகல்யாண மேடையிலே ரத்தின நாற்காலி தானும்போட்டு
பாங்குடனே பட்டு திண்டுவைத்து முல்லையினாலொரு செண்டுவைத்து
இருந்து அரசாட்சி செய்கிறாம் எங்கள் கட்டபொம்மேந்த்ரதுரை
இப்படியரசாக்ஷி செய்தவர்க்கு இடுக்கம் நேர்ந்ததைச் சொல்லுகிறேன்

## சென்னையிலிருந்து காலன் துரை
## சோல்ஜர்பட்டாளங்களுடன் சண்டைக்கு புறப்படுதல்

ராணுவம் பேசுரான் கட்டபொம்மு ராணியம்மாளுள்ள நாளையிலே
காகம்பறக்காத தேசமெல்லாம் கண்டுபிடித்தவன் காலன்துரை
சிட்டுப்பறக்காத தேசமெல்லாம் தேடிப்பிடித்தவன் காலன்துரை
கட்டனைப்பிடித்துத் தூக்காவிட்டால் காதன்துரை யென்றிருக்கலாமா
ஊமைத்துரையைப் பிடிக்கா விட்டால் உயர்ந்த சம்பளம் வாங்குவேனோ
ஐநூறு தோட்டாவும் வாங்கிக்கொண்டு ஆங்காரமகவே காலன்துரை
கருப்புக்குதிரை தன்னுடனே சோல்ஜர் பட்டாளம் ஐநூறுமே
சோல்ஜர்பட்டாளம் கொண்டுவாரார் துருக்கிப்பட்டாளம்கொண்டுவாரார்
கூடாரடோராக்கள் நூறுகளும் குண்டு மருந்துகள் வாங்கிக்கொண்டு
பரம்பிடிங்கி செடிபிடிங்கி மன்மதனென்றொரு பீரங்கியாம்

அடிக்குட்பாளை திடுக்கிடுமாம் அங்கதனென்றொரு ப்ரசங்கியாம்
வம்புடன் சண்டைசெய்ய வாருடன் பட்டாளம் சேரவேணுவார்
வாருங்கள் வாருங்கள் பட்டாளங்கள் வரிசையாகவே என்பிறகே
சென்னைப்பட்டணம் தான்கடந்து செங்கல்பட்டுவாரார் பட்டாளங்கள்
செங்கல்பட்டுஜில்லா தான்கடந்து தேடியே வந்தார் விழுப்புரமும்
விழுப்புரமும் விட்டகன்று விரைவுடன் வாறாராம் பட்டாளங்கள்
கும்பகோணம் நல்லமாயவரம் கூடாரமேபோட வடிந்திருந்தார்
மபார்ட்டிசெய்துமே பட்டாளங்கள் திருச்சிஜில்லாவை கண்டுவாரார்
திருச்சிஜில்லாததான் கடந்து திண்டுக்கல் வந்தாராம் பட்டாளங்கள்
திண்டுக்கல்விட்டுமே தான்கடந்து திருமதுரையே கண்டுகொண்டார்
வாருங்கபட்டாளம்ஒன்றுகூடிஎன்றுவந்து மதுரையுங் கண்டுகொண்டார்
திருமதுரையை தான்கடந்து சென்னைதுரையவர் பட்டாளங்கள்
திருப்பரங்குன்றத்தருகாமல் திருமங்கலத்தையும் சேர்பிடித்தார்
திருமங்கலத்துக்கருகாமல் சேர்ந்துபோறாரும் பட்டாளங்கள்
காலன்துரையார் பட்டாளங்கள் கள்ளிக்குடியையும் சேர்பிடித்தார்
கோக்களஞ்சேரிக்கருகாமல் கொடுமையுள்ள அந்த காலன்துரை
வேகமுடனே வழிநடந்து விருதுநகரைக் கண்டுகொண்டார்
சூலக்கரைக்கி யருகாமல் துலுக்கப்பட்டியைக் கண்டு கொண்டார்
வெப்பிலைபட்டியை தான்கடந்து வேகமுடன் போறாராம் பட்டாளங்கள்
ஜல்தியில்வாருங்களென்றுசொல்லிசாத்தூருதாலுக்கா கண்டுகொண்டார்
சாத்தூரில்டிபார்ட்டிசெய்துகொண்டுசமத்தன்பட்டாளமென்னசெய்தார்
கோளத்தூராமந்த எட்டிநகர் கோவிலுப்பட்டியைதான் கடந்து
கோவிலுப்பட்டியருகாமல் குருக்குப்பாதையை சேர்பிடித்தார்
புகலூராமந்த பாதைவழி போகுதுபார் சோல்ஜர் பட்டாளங்கள்
குருக்குபாதைக்கண்டுகொண்டு துருக்கிப்பட்டாளங்கொண்டுபோறார்
காரணமாகவே காலன்துரை கரிசல்கோட்டல் பாதைவழி
ஓட்டப்பிடாரத்தை கண்டுகொண்டு ஒளிந்துபோறாரும் பட்டாளங்கள்
ஆக்குளத்திற்குப் பக்கத்திலே ஐநூறுபட்டாள மொன்றுகூடி
சண்டைக்கொடிதனை நாட்டலுற்றார் சாமர்த்தியமுள்ள காலன்துரை
படைக்குருவிபோல் கூடினாராம் பார்த்திட்டோர் பயந்தோடும்படி

கூடாரடேரா வடித்துக்கொண்டு கூடியிருக்கிறார் பட்டாளங்கள்
காலன்துரையவர் பட்டாளத்தை கண்ணாலேகண்டாராம் கட்டபொம்மு
பாரமரத்தியாம் பெற்றெடுத்த பாதர்வெள்ளையர் தன்னிடத்தில்
பட்டாளம்வந்து இருக்கிறதை பார்த்துவுரைத்தாராம் கட்டபொம்மு
காதினில்கேட்டாராம் பாதர்வெள்ளை கண்கள் சிவக்குதாமந்தநேரம்
கோபம்பிறக்குதாம் கண்களிலே கொண்டையங்கோட்டை மறவருக்கு
நாமினியோசனை செய்தோமானால் ஞாயங்கிடைக்காது சண்டையிலே
ஐநூறுபட்டாளம் வந்திட்டாலும் அறுப்பேன் தலையை பாதர்வெள்ளை
ஆனாலுமாகுது போனாலும்போகுது அடிக்கிறேன்பார் ஓர்தமாக
மேலமலையாளந் தீப்போட்டெரிக்கிறவீரன் பகடையை தானழைத்தார்
மேலமலையாளம் பெட்டிப்பகடையை மேன்மையுடனே வரவழைத்தார்
காரிக்கவுண்டன் கரிக்கவுண்டன் காவல்கட்டுஞ்சிவ சங்குநாடார்
கொளத்தூர்தனில் சுப்பநாய்க்கர் கொள்ளையிலேமெத்த வல்லவராம்
நாகலாபுரம் நாகப்பநாய்க்கர் நானூறுபேருக்குகைகாரரும்
முள்ளுப்பட்டியிலே முத்தப்பநாய்க்கர் முன்னூறுபேருக்கு கைகாரரும்
நாட்டுத்தலைவரைத்தானழைத்தார் கோட்டைச்சூரரைத் தானழைத்தார்
ஆயிரங்கம்பளம் நூறுபரிவாரம் அடங்கலுமாகவே ஒன்றுசேர்ந்து
போருக்குப்போராரும் கம்பளங்கள் பொல்லாத எமனுங்காலனதுரை
பீரங்கிவாயினில் குண்டுவைத்து பெரியபட்டாளந் தானிருத்தி
கும்பினிபட்டாளமொன்றுசேர்ந்து கூசாமல் சண்டைகள் செய்கிறாரும்
கட்டபொம்முதுரை சேனைகளும் கனத்த சண்டைகள் செய்கிறாரும்
கொற்றவன்சண்டைகள் செய்வதற்கு கொம்பனைக்குட்டியாம் பாதர
ஓடிஓடியே வெட்டினாராம் உத்தமனாரந்த பாதர்வெள்ளை [வெள்ளை
பாய்ந்து பாய்ந்துமே வெட்டினாராம் பாரமலைபோலே தாக்கிட்டாராம்
வீசி வீசியே வெட்டினாராம் வெள்ளைக்காரத்துரைப் பட்டாளத்தை
வலதுகையினால் வெட்டினாராம் இடதுகையினால் தாக்கிட்டாரம்
கும்பினிபட்டாளம்வெட்டினாராம்கொண்டையங்கோட்டை குறத்திமகன்
ஊக்கமுடனே விரட்டினாராம் ஓடிஒளியுதாம் பட்டாளங்கள்
சோல்ஜர்பட்டாளம் வெட்டினாராம் துருக்கிபட்டாளம் வெட்டினாராம்
கட்டக்கருப்பண்ணன் சுந்தரலிங்கம் கருமருந்திலே தீயைவைடா

பாதர்வெள்ளையுடன் சண்டைசெய்ய பாவலாசெய்தாராம் காலன்துரை
ஒண்டியிருந்துமே காலன்துரை ஓங்கியடித்தாராம் பீரங்கியை
கண்டுயிருந்துமே பாதர்வெள்ளை கத்தியால் வெட்டினார் அந்தநேரம்
கவர்மெண்டார்கைத்துப்பாக்கியினால் கதறிவிழுந்தாராம்பாதர்வெள்ளை
தட்டுத்தடுமாறிக் கீழ்விழுந்து தாயை நினைக்கிறார் சக்கம்மாளை
கும்பினிவெற்றி யடைந்ததினால் கோட்டைக்கபகேடு வந்ததம்மா
பாரததேவியே சக்கம்மாளே பல்லாரிதேசத்தை யாண்டவளே
கம்பளத்தார் குளங்காத்தவளே காரிணியே சக்கதேவியம்மா

## வெள்ளையம்மாள் உடன் கட்டை யேறுதல்

தெற்குச்சீமைக்கு வந்தவளே தெக்ஷணபூமியையாண்டவளே
பல்லாரி தேசத்தை விட்டுவந்து பாஞ்சைநகரையுங் காத்தவளே
தொட்டியர் வாக்கில் குடியிருந்து தோக்கலவார்குலங் காத்தவளே
ஒன்பது கம்பளம் வாக்கினிலே உண்மையுரைத்திடும் வீரமல்லு
என்னம்மா என்னம்மா சக்கம்மாளே இப்படி ஆபத்து வந்ததென்ன
என்ன குறைகள் செய்தோமம்மா ஏதுகுறைகள் செய்தோமம்மா
ஒன்றுங் குறைகள் செய்யவில்லை உயிருக்காபத்து வந்ததென்ன
இப்படி தெய்வத்தை தானினைந்து ஏங்கியேபோறாராம் பாதர்வெள்ளை
கோட்டையடுத்துமே போகயிலே குளிர்ந்தமரத்தடியில்
செத்துமடிந்தாராம் பாதர்வெள்ளை சிவலோகஞ் சேர்ந்தாரா மந்தநேரம்
பாதர்வெள்ளையின்மேல் ரெத்தங்களை பறந்துகாகங்குடிக்கக் கண்டார்
கட்டுக்கடங்காத கட்டபொம்மு காரணமாகவே ஓடிவந்தார்
செங்கல்பொடிபோலேசிவத்தையாவாம் ஜெயவீரபாண்டியனூமத்துரை
அண்ணனும் தம்பியும் ரெண்டுபேரும் அழுது புலம்பியே ஓடிவந்து
இவ்வித ஆபத்து வந்ததென்று ஏங்கியழுகிறார் ரெண்டுபேரும்
கொடிப்பாம்புமே போனபோது கோட்டைக்கபகேடு வந்ததடா
என்னடா என்னடா என்பிறவி ஏதுசெய்குவோம் ஊமத்துரை
ஆயிரம்சேனைகள் வந்திட்டாலும் அறுப்பான் தலையை பாதர்வெள்ளை
வீரமதயானை மாண்டவுடன் வந்துவிட்டோம் நாமல் கோட்டைகளை
ஆயனமைத்திட்ட கட்டளைக்கு ஆவது நம்மாலே ஒன்றுமில்லை

இப்படி ஆபத்து வந்ததென்று எடுத்து அடக்கமும் செய்வென்றார்
பாரமாதரியாம் பெற்றெடுத்த பட்டத்தரசியாம் வெள்ளையம்மாள்
மன்னவர்மாண்டதைக்கேட்டவுடன் மண்ணில்புரண்டுமே ஓடிவந்தான்
ஐயய்யோதெய்வமே என்றுசொல்லி அழுதுபுலம்புறா வெள்ளையம்மாள்
மண்ணில்விழுந்துபுரண்டழுதா மன்னவன் தேவியாம்வெள்ளையம்மாள்
கண்டசொர்பனத்தைக்கேளாமலே கயிலாசம் சேர்ந்தீரே என்கணவா
பார்த்தசொர்ப்பனத்தைக்கேளாமலே படுகளத்தினில் மாண்டீர்களோ
ஆரைசதமென்பேன் என் கணவா ஐயையோ நானென்ன செய்வேன் பூமியிலே
ஆவிதுடிக்குதே என்ன செய்வேன் அங்கமொடுங்குதே என் கணவா
கொஞ்சிக்குலாவிடும் நாளிலே கொற்றவரே நீங்கள் மாண்டீர்களோ
சேர்ந்து கலந்திடும் நாளிலே செத்து மடிந்தீரோ என் கணவா
தங்களைவிட்டுமே நானிருந்தால் தாங்குதற்கூடுமோ பூமியிலே
மன்னவரைவிட்டு நானிருந்தால் வாழமுடியாது பூமியிலே
கொற்றவரைவிட்டு நானிருந்தால் கும்பினியில் சேர்ப்பாரோ என்துரையே
இந்தவிதிக்கோ தவமிருந்து எங்கள ஜனங்கள் வீட்டிங்கு வந்தேன்
காலக்கெதிக்கும் நாம் என்ன செய்வோம் கடவுள்செய்ததோர் தீவினைக்கு
அழுதழுதுமே கத்தினாலும் ஆகிறகாரியம் ஒன்றுமில்லை
முட்டாமல் முட்டியழுதாலும் முடியும் காரியமொன்றுமில்லை
இந்தவிதமா யழுதுகொண்டு எப்படி கட்டை யடுக்கிருள்
சந்தனக்கட்டையைத் தானடுக்கி சமர்த்தன் பாதனைத்தூக்கிவைத்து
மார்பிலறைந்துமே வெள்ளையம்மாள் மங்கலம் சொல்லி தீமூட்டினளாம்
பற்றியெரிகின்ற வேளையிலே பத்தினி உத்தமி வெள்ளையம்மாள்
கட்டழகன்கட்டை வேகையிலே காலியுடன்கட்டைதான் பெரிதோ
தெய்வங்கள் தன்னையும் தானினைந்து சேர்ந்து எரிகிருள் வெள்ளையம்மாள்
பர்த்தாவும் பத்தினி ரெண்டுபேரும் பாரினில் கைலாசம் சேர்ந்தாரையா
சையோகமாகவே ரெண்டுபேரும் சக்கம்மாள் பாதத்தை சேர்ந்தனரே
தவித்தப்பிதம் தானிருந்தால் தன்மை பொருக்கணும் நேசர்களே
பாரிலுள்ளோர்கள் கொண்டாடும்படி பாடினேனிக்கதை நேசர்களே.

**பாதர்வெள்ளை சண்டை முற்றிற்று.**

---

கலைமகள் அச்சகம் காலாடிப்பேட்டை சென்னை 19.

திரைப்பட வசனகர்த்தா

**ஆர். வி. பதி அவர்களால் தீட்டியவை**

நீங்கள் நீண்ட நாளாக எதிர்பார்த்திருந்த

**வீரபாண்டியன்**

# கட்டபொம்மன்

**வரலாற்றை**

அனல் தெறிக்கும் அடுக்குமொழி சொற்களால் எழுதப்பெற்ற

**கதை, வசனத்தோடு கூடியது**

**மாணவர்களே!** மார்புயர்த்தி வாழ்ந்த மறத்தமிழர்களே! வீறிட்டெழும் விழிப்புணர்ச்சி தோழர்களே! நம்நாட்டு வீரன் தென்னாட்டுதீரன் **வீரபாண்டியன் கட்டபொம்மன்** அவனை நம்நாடு இழந்தது நாம் இழந்தோம் அந்தவீரனை அழித்த ஆங்கிலேயன் கொடுமைகளை தமிழகமென்னும் நாட்டிலே நம் மரபு என்றமையாலே தீட்டிய **வீரபாண்டியன் கதையை** படிக்க வேண்டிய தமிழ் மணிகளே! முத்துமணிகளே!! நம் நாட்டு நவரத்தினங்களே!!! கன்னிதமிழ் **வீரபாண்டியன் கட்டபொம்மன்** கதை, வசனம் படிக்க தவராதீர்கள்! தூக்குமேடையிலே நமது **கட்டபொம்மன்** கொட்டிய சொற்கள் ஒவ்வொன்றும் கனல் கக்கும் வசனம், கன்னியரின் வீரத்தை வெள்ளைத் தேவன் மனைவி காட்டும் வீராவேசம். படிக்க தவராதீர்கள் அற்புத வசனம் அந்த நாளைய நம் வீரன் கதையை நமக்கு தீட்டி தந்தார்.

தபால் சிலவு 0-10-0 விலை அணா **0—12—0**

கிடைக்குமிடம்.—

**டி. ஆர். பாலகிருஷ்ண முதலியார்**

நெ-2, எழுத்துக்காரன் தெரு காலாடிப்பேட்டை சென்னை 19

Tamil Heritage Foundation

தமிழ் மரபு அறக்கட்டளை

Electronic preservation of Tamil heritage materials

e-Book series

an international NGO initiative to digitize old Tamil books and palm leaf manuscripts

visit http://www.tamilheritage.org

தமிழ் ஓலைச்சுவடிகள், நூல் பாதுகாப்பு.

பாதுகாப்பற்ற நிலையில், மறுபதிப்பு காணாத பழைய நூல்கள், ஓலைச்சுவடிகள் போன்ற தமிழ் முதுசொம்களை மின்பதிப்பாக்கி தமிழ் வளத்தை நிரந்தரமாக்கும் ஒரு சர்வதேச தன்னார்வ முயற்சி.

மேலும் அறிய: http://www.tamilheritage.org

முதுசொம் முத்திரை

தமிழ்ப்பாதுகாப்பின் அக்கறை